RNI No : TNTAM/2023/86867 www.deltamalar.com 95667 16060

# டெல்டா மலர்

DELTA MALAR

| மலர் - 4 | இதழ் - 91 | 23-31 டிசம்பர் 2025 | பக்கம் - 8 | விலை ரூ.5 | தஞ்சாவூர் |
|---|---|---|---|---|---|
| VOL - 4 | ISSUE - 91 | 23-31 DECEMBER 2025 | PAGE - 8 | PRICE ரூ.5 | THANJAVUR |


### தமிழக சட்டசபை தேர்தலில்


## பாஜ வேட்பாளர்களை தேர்வு செய்யும் அமித்ஷா ஸ்டைல்

சட்டசபை தேர்தலில், தமிழக பா.ஜ., சார்பில் தயாரிக்கப்படும் வேட்பாளர் பட்டியலில், 80 சதவீதம் மாவட்ட பொறுப்பாளர்கள், 20 சதவீதம் மாநில நிர்வாகிகள் இடம் பெற வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக சட்டசபை தேர்தல், பா.ஜ., பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர் பியுஷ் கோயல், இணை பொறுப்பாளர்களான மத்திய இணை அமைச்சர்கள் அர்ஜுன் ராம் மேக்வால், முரளிதர் மொஹோல் ஆகியோர் சமீபத்தில் சென்னை வந்தனர்; தமிழக பா.ஜ., மையக் குழு நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

பின், பா.ஜ., தலைவர்கள், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமியை சந்தித்து பேசினர். அப்போது, அமித்ஷா தரப்பில், தேர்தல் வியூகம் அமைக்கும் நிறுவனம், மத்திய உளவுத் துறை தேர்வு செய்த 50 தொகுதிகளின் பட்டியல் கொடுக்கப்பட்டது.

வருவாய் மாவட்டம் மற்றும் லோக்சபா தொகுதிகளின் அடிப்படையில், குறைந்த பட்சம் 40 தொகுதிகளை பா.ஜ.,வுக்கு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு, அ.தி.மு.க., 30 தொகுதிகளை



தர சம்மதம் தெரிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இதையடுத்து, எந்தெந்த தொகுதிகளில் யார், யாரை வேட்பாளராக்குவது என்ற பட்டியல் தயாரிப்பு தொடர்பாக, தமிழக பா.ஜ., மூத்த நிர்வாகி ஒருவர், டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். அவர் ஆலோசனையின் படி, வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட உள்ளது.

இது குறித்து, தமிழக பா.ஜ., மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: தமிழக சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., 30 அல்லது 35 தொகுதி கள் ஒதுக்கினால், அவற்றில் 25 தொகுதிகளாவது வெற்றி பெறும் வகையில் அமித்ஷா வியூகம் அமைத்து உள்ளார். அதன் ஒரு பகுதியாக, ஓட்டுச்சாவடி பொறுப்பாளர்களை 100 சதவீதம் நியமித்த, மாவட்ட பொறுப்பாளர்கள், தொகுதி மக்களிடம் செல்வாக்கு பெற்றவர்கள் போன்றோர், வேட்பாளர்களாக தேர்வு செய்யப்பட உள்ளனர்.

மாவட்ட பொறுப்பாளர்களுக்கு 80 சதவீதம், மாநில நிர்வாகிகளுக்கு 20 சதவீதம், வேட்பாளர் பட்டியலில் வாய்ப்பு அளிக்கப்பட உள்ளது. குறிப்பாக, இரண்டு அல்லது மூன்று முறை தோல்வி அடைந்தவர்கள், எம்.பி., - எம்.எல்.ஏ., கவர்னர், மத்திய அமைச்சர் போன்ற பதவிகளை வகித்தவர்கள் போன்றவர்களுக்கு, தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுவது குறைவு தான். குற்றப்பின்னணி உள்ளவர்களுக்கும் போட்டியிட வாய்ப்பு இல்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்

## வங்கதேச அரசுக்கு இந்தியா கண்டனம்

வங்கதேசத்தில் ஹிந்துக்கள் உட்பட சிறுபான்மையினருக்கு எதிராக தொடரும் தாக்குதல் சம்பவங்களுக்கு, மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இதை அரசியல் வன்முறை அல்லது ஊடகங்களின் மிகைப்படுத்தல் என்று கூறி, புறக்கணிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், சமீப நாட்களாக ஹிந்துக்கள், கிறிஸ்துவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சமீபத்தில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த திபு சந்திர தாஸ் என்ற இளைஞரை, அங்குள்ள கும்பல் மரத்தில் தலைகீழாக தொங்கவிட்டு, உயிருடன் எரித்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.





இந்நிலையில், வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால், டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மத நிந்தனை செய்ததாக கூறி ஹிந்து இளைஞரை, ஒரு கும்பல் உயிருடன் தீயிட்டு கொன்றதை ஏற்க முடியாது. இச்சம்பவத்திற்கு இந்தியா கண்டனம் தெரிவிப்பதுடன், இக்குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். வங்கதேசத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் பெரும் கவலைக்குரிய விஷயம். அங்குள்ள இடைக்கால அரசின் பதவிக்காலத்தில் மட்டும் சிறுபான்மையினருக்கு எதிராக 3,000 வன்முறை சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

இதை அரசியல் வன்முறை என்றோ, ஊடகங்களின் மிகைப்படுத்தல் என்றோ கூறி, வங்கதேச அரசு புறக்கணிப்பதை ஏற்க முடியாது. வங்கதேசத்தில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடப்பதை மத்திய அரசு ஆதரிக்கிறது. இந்த கண்ணோட்டத்துடனே, தாரிக் ரஹ்மான் திரும்பியதையும் பார்க்கிறோம். அங்குள்ள சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும்படி, மத்திய அரசு தன் நீண்டகால நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

வங்கதேசத்தில் தற்போதைய நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். மதத்தை பாராமல், அனைத்து மக்களையும் பாதுகாக்க தன் அரசியலமைப்பு கடமைகளை வங்கதேச அரசு நிலைநிறுத்தும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## 5 மாநிலங்களில் 75 மாநிலங்களவை இடங்கள் காலியாகிறது



● டெல்லி

2026ம் ஆண்டு ஏப்ரல், ஜூன், நவம்பர் மாதங்களில், 75 மாநிலங்களவை இடங்களுக்கான பதவிகள் காலியாவதால் புதிய உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளது. அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அடுத்தாண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்நிலையில், ஏப்ரல், ஜூன், நவம்பர் மாதங்களில், 75 மாநிலங்களவை இடங்களுக்கான பதவிகளும் காலியாகிறது. உத்தரப்பிரதேசத்தில் 10 இடங்களும், பீகாரில் 5 இடங்களும், மகாராஷ்டிராவில் 7 இடங்களும் காலியாக போகும் நிலையில், மத்தியப்பிரதேசம், அசாம், அருணாச்சலபிரதேசம், மேகாலயா, மணிப்பூர், மிசோரம், உத்தரகாண்ட், இமாச்சலபிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர், ஜார்க்கண்ட், ஆந்திரா, தெலங்கானா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் பல வடகிழக்கு மாநிலங்களிலும் இடங்கள் காலியாக உள்ளன.

2026ம் ஆண்டு பதவிக்காலம் முடிவடையும் மூத்த தலைவர்களில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் பிரதமர் எச்.டி.தேவகவுடா, திக்விஜய சிங், சரத் பவார், ஒன்றிய அமைச்சர்கள் ஹர்தீப் சிங் பூரி, பி.எல்.வர்மா, ரவ்னீத் சிங் பிட்டு மற்றும் ஜார்ஜ் குரியன் ஆகியோர் அடங்குவர். இவர்கள், மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வருவார்களா அல்லது புதியவர்களால் மாற்றப்படுவார்களா என்பது தேர்தல் நேரத்தின்போதே தெரிய வரும். தற்போது மாநிலங்களவையில் தேசிய ஜனநாயக கூட்டணி 129 இடங்களையும், இந்தியா கூட்டணி 78 இடங்களையும் கொண்டுள்ளன.

### வங்கதேசத்தில் ஹிந்து இளைஞர்கள் கொலை

# லண்டனில் இந்தியர்கள் முற்றுகை போராட்டம்




● லண்டன்

வங்கதேசத்தில் ஹிந்துக்கள் கொல் லப் படு வதைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பிரிட்டனில் இந்தியர்கள் , அங்குள்ள வங்கதேச தூதரக அலுவல கத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

வங் கதேசத்தில் சமீப நாட்களாக ஹிந்துக்கள் , கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த தீபு சந்திர தாஸ் என்ற இளைஞரை மத நிந்தனை செய்ததாக அங்குள்ள கும்பல் மரத்தில் தலைக்கீழாக தொங்கவிட்டு உயிருடன் எரித்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து ராஜ்பாரி மாவட் டத்தைச் சேர்ந்த அம்ரித் மண் டல் என் பவரும் அடித்துக்கொல்லப்பட்டார்.

வங் கதேசத்தில் நடந்த சம்பவத்திற்கு மத்திய அரசு கடும் கண் டனம் தெரிவித்துள் ளது. ஹிந்து மக் களுக்கு ஆதரவாக டெல்லியில் வங் கதேச தூதரகத்தை முற்றுகையிட்டு இந்திய மக்கள் போராட்டத்தில் ஈடு பட் டனர். இந்த நிலையில், வங் கதேசத்தில் சிறுபான்மையினமான ஹிந்துக் கள் கொல் லப்பட்ட சம்பவத்தை கண்டித்து பிரிட் டனின் லண் டனில் உள்ள வங் கதேச தூதரக அலு வல கத்தை முற்றுகையிட்டு இந்திய வம்சாவளி மக்கள் போராட்டத் தில் ஈடு பட் டனர். அப்போது, வங் கதேசத்தின் தேசிய கீதமான' அமர் ஷோனர் பங் களா'வை இசைத்து சிறுபான் மையினருக்கு எதிரான வன் முறையை நிறுத் தக் கோரி கோஷங்களை எழுப்பினர்

முன்னதாக ஹிந்துக்களுக்கு ஆதரவாக நேபாளத்தின் பல் வேறு பகுதி களிலும் போராட் டம் நடத்தப்பட்டது.

# தங்கத்தின் விலை உயர்வுக்கான முக்கிய காரணங்கள்



பொருளாதார நிச் சயமற்ற தன்மை (Economic Uncertainty): பொருளாதார நெருக்கடிகள் ஏற் படும்போது, தங்கம் ஒரு பாது காப்பான முதலீடாகக் கருதப் படுகிறது, இதனால் அதன் தேவை அதிகரிக்கிறது.

புவிசார் அரசியல் பதற்றங்கள் (Geopolitical Tensions): உலகப் போர்கள் அல்லது அரசி யல் பதற் றங் கள் நிலவும் காலங் களில் முதலீட்டாளர் கள் தங் கத்தின் பக்கம் திரும்புவார்கள், இது விலையை உயர்த்தும்.

அமெரிக்க டாலரின் மதிப்பு சரிவு (Fall in US Dollar Value): டாலரின் மதிப்பு குறையும் போது, தங்கத்தின் விலை அதி கரிக்கிறது, ஏனெனில் தங் கம் டாலரில் வாங்கப்படுகிறது.

மத்திய வங்கிகளின் கொள் முதல் (Central Bank Purchases): பல நாடு களின் மத்திய வங்கி கள் தங் கத்தை அதிக அளவில் வாங்கி சேமித்து வைப் பது விலையேற் றத்திற்கு ஒரு முக்கியக் காரணம்.

வட்டி விகிதக் குறைப்பு எதிர்பார்ப்பு கள் (Expectation of Interest Rate Cuts): வட்டி விகிதங் கள் குறையும்போது, தங் கம் போன்ற வருமானம் தராத சொத்துக் களின் மீதான முதலீடு கவர்ச்சிகரமாகிறது, இதனால் தேவை அதி கரிக் கிறது.

பணவீக் கம் (Inflation): பணவீக்கம் அதிகரிக்கும்போது, தங்கத்தின் மதிப்பு குறையாமல் பாதுகாக்க உதவும் என்ற நம் பிக்கையில் முதலீட்டாளர் கள் தங்கத்தை வாங்குகிறார்கள்.

தேவை மற்றும் வழங் கல் (Supply and Demand): நகை கள் மற்றும் தொழில்துறைக் கான தேவை, தங் கத்தின் உற் பத்தி, சுரங் கப் பிரச் சனை கள் ஆகியவை விலையை பாதிக் கின்றன.

பங்குச் சந்தை முதலீடு (Stock Market Trading): பங்குச் சந்தைகளில் தங் கத்தின் வர்த் தகமும், ETF (Exchange Traded Funds) முதலீடு களும் அதி கரிப் பதும் விலையை உயர்த் துகிறது.

இந்த காரணி கள் அனைத் தும் சேர்ந்து தங் கத்தின் விலையை சர்வதேச சந்தையில் அதிகரிக்கச் செய்கின்றன, இது இந்தியாவிலும் எதிரொலிக் கிறது.





ஆடுதுறைக்கு வருகை தந்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களை, ஆடுதுறை பேரூராட்சி மன்ற தலைவரும், பாமக தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளருமான ம.க.ஸ்டாலின் சந்தித்தார். அப்போது உடன் இருந்த மயிலாடுதுறை மாவட்ட நீதிபதி எல்.எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

# ஆட்சியில் பங்கு கேட்டு தி.மு.க.,விடம் வலியுறுத்தி வருகிறோம்: செல்வப்பெருந்தகை

● சென்னை

“ஆட்சியில் காங்கிரசுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை, தி.மு.க., தலைமையிடம் தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் வலியுறுத்தி வருகிறார்,” என, தமிழக காங்கிரஸ் தலைவர் செல் வப்பெருந் தகை கூறினார்.

அவர் அளித்த பேட்டி: பா.ஜ., ஆளும் மாநிலங்களில், சிறுபான் மையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

காங்கிரசுக்கு சிக்கல் இது, இந்திய இறையாண்மையின் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு சமம். இதுபோன்ற சம்பவங்கள் இனி நடக்காமல் இருக்க, மத்திய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். வங்கதேசத்தில் சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆனால், அதற்கு கூட பிரதமர் மோடி கண்டனம்



தெரிவிக்கவில்லை.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ராகுல், பிரியங்கா விரைவில் தமிழகம் வரவுள்ளனர். பல மாநிலங் களில், கடைசி நேரத்தில் தொகுதிகள் ஒதுக்கப்படுவதால், காங் கிரசுக்கு சிக் கல் ஏற் படுகிறது; கடைசியாக பீஹாரிலும் கூட அப்படித்தான் நடந்தது. தி.மு.க., கூட்டணியில் இரண்டு மாதம் முன்பே, தொகுதி பங்கீடு குறித்து பேசி முடித்தால்தான், முன்கூட் டியே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடியும். அதை தான் தேர்தல் பொறுப்பாளர் என்ற முறையில், தி.மு.க.,விடம் கிரிஷ் ஷோடங் கர் பேசியிருக்கிறார்.

சொந்த கருத்து ‘ஆட்சியில் பங்கு' உள்ளிட்ட விஷயங்களை, தி.மு.க.,விடம் பேசி முடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் ஷோடங்கர் செயல் பட்டு வருகிறார். காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சு குழு தலைவராக வும் அவர் இருப்பதால், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து வலி யுறுத்தி வருகிறார். தமிழகத்தில், ‘இண்டி' கூட்டணி வலிமையாக உள்ளது. காங்கிரஸ் பிரமுகர் திருச்சி வேலுசாமி த.வெ.க., வுக்கு ஆதரவாக பேசியது, அவ ருடைய சொந்த கருத்து. முதல்வர் ஸ்டாலின், 80 சதவீதம் தேர்தல் வாக்குறுதி களை நிறைவேற்றி யுள்ளார். மீதமுள்ள வாக்குறு திகளை அவர் நிச்சயம் நிறை வேற்றுவார்' என்றார்.

### தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது

# காங்., நிர்வாகி கருத்துக்கு அண்ணாமலை வரவேற்பு

● சென்னை

தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.

உத்தரபிரதேச மாநிலத்தை விட தமிழக கடன் நிலைமை மோசமாகியுள்ளது. கடன் தொகை அதிகரித்துள்ளது என காங்கிரஸ் தகவல் பகுப்பாய்வு குழுத் தலைவர் ப்ரவீன் சக்கரவர்த்தி கூறி இருந்தார். இதனை அண்ணாமலை வரவேற்று உள்ளார்.

அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: பொய் சொல்வதில் கோபாலபுரம் குடும்பம் முனைவர் பட்டம் பெற்றுள்ளது. இண்டி கூட்டணியில் உள்ள கூட்டாளிகளில் ஒருவர் தரவுகளைப் புரிந்து கொண்டு கடன் குறித்து பகிரங்கமாகப் பேசுவது வரவேற்கத்தக்கது.

வெறும் ஐந்து ஆண்டுகளில், திமுக தமிழகத்தின் கடனை இரட்டிப்பாக்கியுள்ளது, அதே நேரத்தில் பற்றாக்குறைகளை மறைப்பதற்கும், பெருகிய வளர்ச்சிக் கதைகளை முன்னிறுத்துவதற்கும் கடன்களை வசதியாகப் பயன்படுத்துகிறது.

இருப்பினும், பெரிய கேள்வி என்னவென்றால், திமுகவிற்கும் காங்கிரசுக்கும் இடையே உண்மையில் என்ன நடக்கிறது? ஐக்கிய முற்போக்கு கூட்டணி சகாப்தத்தின் மோதல், சண்டை மீண்டும் உருவாவது போல் தெரிகிறது. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# பக்தி மலர்

## உலகெங்கும் கொண்டாடப்படும் புத்தாண்டின் வரலாறு!

அந்த காலகட்டத்தில் ரோமானிய காலண்டரில் 10 மாதங்கள் மட்டுமே இருந்தன. மார்ஷியஸ் நினைவாக பெயர் சூட்டப்பட்ட மார்ச் மாதம் முதல் மாதமாக இருந்தது. உலகெங்கும் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1-ந் தேதி ஆங்கில புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. இதற்கு பின்னால் சுவாரஸ்யம் நிறைந்த வரலாறு இருக்கிறது. அதாவது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆங்கில புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இருப்பினும் முந்தைய காலங்களில் ஜனவரி 1-ம் தேதி புத்தாண்டாக கொண்டாடப்படவில்லை. அந்த காலகட்டத்தில் ரோமானிய காலண்டரில் 10 மாதங்கள் மட்டுமே இருந்தன. மார்ஷியஸ் நினைவாகப் பெயர் சூட்டப்பட்ட மார்ச் மாதம் முதல் மாதமாக இருந்தது. அதனால் மார்ச் மாதம் தான் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து ரோமானிய மன்னரான போம்பிலியஸ் 2 மாதங்களை சேர்த்து மொத்தம் 12 மாதங்களாக்கினார். ஜனஸ் என்னும் ரோமானியக் கடவுளின் நினைவாக ஜனவரியஸ், பிப்ரவரியஸ் ஆகிய மாதங்கள் சேர்க்கப்பட்டன.

புகழ்பெற்ற மன்னரான ஜூலியஸ் சீசர், ஜூலியன் காலண்டரை உருவாக்கினார். அதில் தான் ஜனவரி 1 ஆங்கில புத்தாண்டாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அது உலகம் முழுவதும் பெரும்பாலானோர் பின்பற்றும் கிரிகோரியன் காலண்டருடன் ஒத்திருந்தது. கடவுள் ஜனஸைக் கவுரவிக்கும் விதமாக ரோமானியர்கள் அம்மாதத்தின் முதல் நாளை புத்தாண்டாக கொண்டாட ஆரம்பித்தனர்.

எனினும் இதில் பல்வேறு குழப்பம் நீடித்த நிலையில் இறுதியாக கி.பி. 1500-களில் போப் கிரிகோரி என்பவர், லீப் ஆண்டை உருவாக்கி புதிய காலண்டரை உருவாக்கினார். இதைத்தொடர்ந்து கிரிகோரியன் காலண்டர் நடைமுறைக்கு வந்தது. இதைத்தான் இன்று நாம் பின்பற்றி, புத்தாண்டை கொண்டாடி வருகிறோம்.



## கிறிஸ்துமஸ் தாத்தா வந்த வரலாறு!

கிறிஸ்துமஸ் தாத்தா என அழைக்கப்படும் "சாண்டா கிளாஸ்' (SANTA CLAUS) கற்பனையில் உருவாக்கப்பட்ட ஒரு பாத்திரம்!

கிறிஸ்துமஸ் தாத்தா என அழைக்கப்படும் "சாண்டா கிளாஸ்' (SANTA CLAUS) கற்பனையில் உருவாக்கப்பட்ட ஒரு பாத்திரம்! கிறிஸ்துமஸ் தாத்தா என்றவுடன் எல்லோருக்கும் பருத்த உடல், பனிக்குல்லாய், சிவந்த கன்னக் கதும்புகள், குறும்பு கொப்பளிக்கும் கண்கள், சிகப்புக் கம்பளி ஆடை, தோளிலே ஒரு மூட்டை இவைதான் அனை வருக்கும் ஞாபகம் வரும்.

ஆனால் உண்மையில் நிகோலஸ் என்ற புனித பாதிரியார் துருக்கியில் பிஷப்பாக இருந்து பல ஏழைகளின் துயர் துடைத்து வந்தார். இவரின் நினைவாகத் தான் கிறிஸ்துமஸ் தாத்தா பாத்திரம் உருவாயிற்று! "டாக்டர் க்ளெமென்ஸி மூர்' என்பவரே இப்பாத்திரத்தை உருவாக்கினார்.

இன்று கம்யூனிஸ்ட் நாடுகள் கூட சாண்டா கிளாஸ் தாத்தாவை அங்கீகரித்து இருக்கின்றன. முதலில் டச்சு மக்கள் கிறிஸ்துமஸ் தாத்தாவை "சின்டி கிளாஸ்' என்றனர். அதில் இருந்து சாண்டா கிளாஸ் என்ற பெயர் வந்தது. உண்மையில் கிறிஸ்துமஸ் தாத்தாவின் பெயர் செயின்ட் நிகோலஸ்!

அன்பு, நல்லுறவு, தாராள மனம், குழந்தைகளிடம் விருப்பம் ஆகிய நற்குணங்களுக்கு உரியவர் இந்த செயின்ட் நிக்கோலஸ். அவர் தனக்கு உரிய விருந்து நாளன்று (டிசம்பர் – 6 ஆம் நாள்) குழந்தைகளுக்கு பரிசு கொடுத்து மகிழ்வார். இன்றும் கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் இந்த சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் குழந்தைகளின் மகிழ்ச்சி அதிகரிக்கிறது!



சாண்டா கிளாஸ் என்ற கிறிஸ்துமஸ் தாத்தா, கிறிஸ்துமஸ் திருநாளில் பனி வண்டியில் பறந்து வந்து வீடுகளின் புகைப்போக்கி வழியாக இறங்கி வந்து குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கும் நீண்ட வெண்தாடி வைத்த ஒரு குண்டுத் தாத்தா! இது நமக்கெல்லாம் தெரியும். சிரியா நாட்டில் சாண்டா கிளாஸ் என்பது பரிசுகள் கொண்டு வரும் ஒரு ஒட்டகம் என்று குழந்தைகள் நம்புகிறார்கள். கிறிஸ்து பிறந்த இரவில் ஒட்டகங்களில் வந்த மூன்று அறிஞர்களும் இயேசு பாலகனை வாழ்த்திய போது அந்த ஒட்டகங்கள் சோர்ந்து மயங்கி விட்டன. அப்போது குழந்தை இயேசு அவைகளை இரட்சித்து புத்துணர்ச்சி வழங்கினாராம்.

இங்கிலாந்தில் சாண்டா கிளாஸ் தாத்தா நீண்ட வெள்ளைத் தாடி, சிவப்புக் கோட்டு, ரெயின்டீர் என்ற கலைமான் இழுத்து வரும் பனிச்சறுக்கு வண்டியான ஸ்லெட்ஜில் பரிசு மூட்டையுடன் பவனி வருவார். குழந்தைகள் தங்கள் கட்டிலின் கால்மாட்டில் ஸ்டாக்கின்களைத் தொங்க விட்டிருப்பார்கள். சாண்டா புகைப்போக்கி வழியாக இறங்கி வந்து இதற்குள் பரிசுப் பொருள்களைப் போட்டுவிட்டுப் போவார். இது இங்கிலாந்துக் குழந்தைகளின் நம்பிக்கை.

ஜப்பானியக் குழந்தைகள் சாண்டா கிளாஸ் தாத்தாவை "ஹோட்டியோஷோ' என்பார்கள். இவருக்குப் பின்னாலும் கண்கள் இருக்கும்! இதனால் எல்லாக் காலத்திலும் எல்லாத் திசைகளிலும் எல்லாக் குழந்தைகளையும் அவரால் காண முடியுமாம்!

ஹாலந்து தேசத்துக் குழந்தைகள் சாண்டாவை இழுத்து வரும் "ரெயின்டீர்' கலைமானுக்கு உணவாகக் காரட்டுகளையும் வைக்கோலையும் வைத்து வரவேற்கிறார்கள்.

டென்மார்க் குழந்தைகள் தங்களுக்குப் பரிசு தரும் தாத்தாவின் பசிக்கு ஒரு கிண்ணத்தில் பாலும் ஒரு தட்டில் அரிசி சாதமும் வைத்திருப்பார்களாம்! (தாத்தாவின் மீது குழந்தைகளுக்கு எவ்வளவு பாசம்!)






### 20 ஆண்டு ஜெயில் வாழ்க்கை!

## ஆயுள் தண்டனையை ரத்து செய்ய பவாரியா கொள்ளையர்கள் அப்பீல்

**சென்னை:** கும்மிடிப்பூண்டி அதிமுக எம்எல்ஏ சுதர்சனத்தை கொன்று 62 சவரன் நகைகளை கொள்ளையடித்த வழக்கில் பவாரியா கொள்ளையர்களுக்கு சென்னை கூடுதல் நீதிமன்ற அமர்வு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அதை எதிர்த்து மூவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி எம் எல் ஏவாக இருந்த சுதர்சனத்தின் வீட்டு கதவை யாரோ தட்டினர். உடனே மாடியில் இருந்த சுதர்சனம் கீழே இறங்கிய போது முகமூடி அணிந்திருந்த கொள்ளையர்களை பார்த்து சப்தமிட்டார்.

இதையடுத்து பவாரியா கொள்ளையர்கள் அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு அவரது வீட்டில் இருந்த 62 பவுன் நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்த சம்பவம் தமிழகத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா, கொள்ளையர்களை சுட்டு பிடிக்க உத்தரவிட்டார். இதையடுத்து அப்போது ஐஜியாக இருந்த ஜாங்கிட் தலைமையில் ஒரு தனிப் படை அமைத்து கொள்ளை யர் கள் தேடப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான், ஹரியானாவை சேர்ந்த 9 பவாரியா கொள்ளை யர் களை கைது செய்து தமி ழ கத்திற்கு கொண்டு வந்தனர். கைதான 9 பேரில் 3 பேர் ஜாமீனில் வெளியாகி தலைமறைவாகிவிட்டனர். 2 பேர் சிறையிலேயே உயிரிழந்துவிட்டனர்.

தற்போது சிறையில் உள்ள ஜெகதீஷ், ராகேஷ், அசோக், ஜாமீன் பெற்ற ஜெயில்தார் சிங் ஆகிய 4 பேர் வழக்கை சந்தித்து வந் தனர். இந்த நிலையில் 20 ஆண்டு கள் கழித்து பவாரியா கும் பலைச் சேர்ந்த ஜெகதீஷ், அசோக், ராகேஷ் ஆகிய மூவரும் குற்றவாளிகள் என சென்னை கூடுதல் நீதிமன்ற அமர்வு கடந்த நவம்பர் 23 ஆம் தேதி தீர்ப்பளித்துள்ளது. இவர்களுக்கான தண் டனை விவரங்களை நவம் பர் 24 ஆம் தேதி அறிவிப்பதாக நீதிமன்றம் தெரிவித் தது. இந்த நிலையில் ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகிய மூவருக்கும் ஆயுள் தண் டனை விதித்தும் 4ஆவது குற் றவாளியான ஜெயில்தார் சிங்கை விடு தலைச் செய்தும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் தங்களுக்கு வழங் கப் பட்ட ஆயுள் தண்டனையை எதிர்த்து ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகிய மூவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளனர். அதில் ஏற் க னவே 20 ஆண்டு கள் சிறையில் இருந்துவிட் டதால் தங் களுக்கான ஆயுள் தண்டனையை ரத்து செய்யுமாறு அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர். இதை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி, பெரியபாளையம் போலீஸார் பதிலளிக்குமாறு உத்தரவிட்டார்.

# தமிழகத்தை உலுக்கிய 13 கொலைகள்

## பதறவைத்த பவாரியா கொள்ளை கும்பல்

தமிழகத்தை அச்சுறுத்திய ஈவு, ஈரக்கமற்ற பயங்கரமான கொள்ளை கும்பல். 1995 முதல் 2005 வரை இந்த கும்பல் தமிழ்நாட்டில் தொடர்ச்சியான கொள்ளைகள் மற்றும் கொலைகளை அரங்கேற்றியது. 10 ஆண்டுகளில் 24 கொள்ளை சம்பவங்கள், அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், காங்கிரஸ் பிரமுகர் தாளமுத்து நடராஜன் உட்பட 13 கொலைகள், 63பேரை காயப்படுத்தியது, ரூபாய் 2 கோடி மதிப்பிலான நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்தது. தமிழகத்தில் இன்னும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளது.

பாவரியா கொள்ளைக் குழு என்பது வட இந்தியாவில் உத்தரப் பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட நாடோடி குற்றக் குழுக்களைக் குறிக்கிறது. இந்தக் குழுக்கள் கொலை, கொள்ளை மற்றும் தாக்குதல் உள்ளிட்ட வன்முறைக் குற்றங்களைச் செய்வதற்காக பல்வேறு இந்திய மாநிலங்களில் அறியப்படுகின்றன. பாவர்யா சமூகம் வரலாற்று ரீதியாக பிரிட்டிஷ் காலனித்துவ சகாப்தத்தின் குற்றவியல் பழங்குடியினர் சட்டம், 1871 இன் கீழ் "குற்றவியல் பழங்குடியினர்" என்று வகைப்படுத்தப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டாலும், அந்த அவப்பெயர் இன்னும் உள்ளது. வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 போன்ற சட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களின் பாரம்பரிய வேட்டை வாழ்க்கையை மோசமாகப் பாதித்தது, இதனால் சிலர் குற்றச் செயல்களில் ஈடுபடத் தூண்டப்பட்டனர்.



தமிழகத்தில் இந்த பவாரியா கொள்ளை கும்பல் 1995 முதல் 2005வரை தேசிய நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் உள்ள தனிமையான வீடுகளை குறிவைத்து தங்களது கைவரிசைகளை காட்டி வந்தனர். இந்த கும்பல் வெளிமாநிலங்களில் இருந்து லாரியில் வந்து இங்கு கொலை, கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றிவிட்டு தப்பி சென்றுள்ளனர். கொடூரத்திற்கு பெயர் பெற்ற இந்த கொள்ளை கும்பல் பெரும்பாலும் ஸ்டீல் கோடாரிகள், இரும்பு கம்பிகள் அல்லது நாட்டு துப்பாக்கிகளைப் பயன்படுத்தி குடியிருப்பாளர்களைத் தாக்குவார்கள். பிடிபட்டால் தப்பிக்க எளிதாக இருக்க உடம்பில் எண்ணெய் தடவிக்கொள்வார்கள். மேலும் கண்டுபிடிக்கப்படுவதைத் தவிர்க்க ஆயுதங்களையும், மொபைல் போன்களையும் குற்ற இடங்களிலேயே விட்டுச் சென்றுவிடுவார்கள். இவர்கள் ஒரு குழுக்களாக செயல்படுகின்றனர். இதில் ஆண்கள் பொதுவாக குற்றங்களைச் செய்கிறார்கள். அதே நேரத்தில் பெண்கள் பெரும்பாலும் பாத்திரங்கள் அல்லது துணிகளை விற்பவர்களாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

ஜூன் 7, 1995 தமிழகத்தில் பவாரியா கும்பல் முதல் கொலை,கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றியது வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டையில் மோகன் குமார் என்பவரது வீட்டில் புகுந்து தாக்குதல் நடத்திய கும்பல் அவரைக் கொலை செய்து, அவரது மனைவி மற்றும் இரு குழந்தைகளையும் படுகாயப்படுத்தியது. பின்னர், 50,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது. அடுத்த ஆண்டு வேலூரில் சங்கர் என்பவரது வீட்டில் மீண்டும் தாக்குதல் நடத்தியது பவாரியா கும்பல். போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். அந்த பின்னர் 5 ஆண்டுகளில் எந்த சம்பவத்தையும் அந்த கும்பல் தமிழகத்தில் அரங்கேற்றவில்லை.

### மீண்டும் டார்கெட்டான தமிழகம்:

2001-ல் மீண்டும் தமிழகத்தை டார்க்கெட் செய்தது அந்தக்கும்பல். ஆனால் இந்த முறை அந்த கும்பல் அடுத்தடுத்து குற்றச் சம்பவங்களை அரங்கேற்றியது. 2001 அவிநாசியில் ஒரு பெரிய கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டது. அடுத்தடுத்து தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் மேலும் மூன்று கொள்ளைச் சம்பவங்களை அரங்கேற்றியது. 2002ஆம் ஆண்டில், தமிழகத்தில் அந்தக் கும்பல் நடத்திய குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சேலம், அவிநாசி, காங்கேயம், கும்மிடிப்பூண்டி, ஆத்தூர், கரியமங்கலம், பர்கூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் எட்டு கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகின.




# 10 லட்சம் பேருக்கு நோட்டீஸ்

தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்த (SIR) படிவங்களை முறையாக சமர்ப்பிக்காத சுமார் 10 லட்சம் வாக்காளர்களுக்கு விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பத் தொடங்கியுள்ளது. இந்த நோட்டீஸ்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) மூலம் நேரடியாக வீடுகளுக்கே வழங்கப்படும்.

**வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR)**

தமிழ்நாட்டில் சுமார் 97.37 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் வரைவுப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். விடுபட்டவர்கள் மற்றும் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்க்க டிசம்பர் 28-ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு:**

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்களுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 19, 2025 அன்று வெளியிடப்பட்டது. உத்தரப் பிரதேசத்தில் டிசம்பர் 31 அன்றும், கேரளா, மத்திய பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் டிசம்பர் 23 அன்றும் வரைவுப் பட்டியல்கள் வெளியிடப்பட்டன.

**பெயர் சேர்க்கை முகாம்கள்**



வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இது வரை தமிழகத்தில் 1.8 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் படிவம் 6-ஐப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**ஆதார் இணைப்பு**

வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம் செய்ய ஆதாரைப் பயன்படுத்தலாம் என உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்துள்ளது.

சிறப்பு பார்வையாளர்கள்:

முக்கிய மாநிலங்களில் நடந்து வரும் தேர்தல் பட்டியல் திருத்தப் பணிகளைக் கண்காணிக்க சிறப்பு பார்வையாளர்களை (Special Roll Observers) தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

**கட்சி விதிகள்**

அரசியல் கட்சிகள் தங்களது கட்சி அரசியலமைப்பு விதிகளின்படி செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

# விருப்பமனு பெறுவதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!






அதிமுகவில் விருப்பமனு பெறுவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், “தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற கழக உடன்பிறப்புகள், தங்களுடைய விருப்ப மனுக்களை தலைமைக் கழகத்தில் 15.12.2025 முதல் 23.12.2025 வரை வழங்கலாம் என அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன்படி ஏராளமானோர் விருப்ப மனுக்களை தலைமைக் கழகத்தில் வழங்கி உள்ளனர்.

இந்நிலையில், கழகத்தின் சார்பில் விருப்ப மனுக்கள் பெறுவதற்கான கால அவகாசத்தை நீட்டித்துத் தருமாறு கழக நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும் தொடர்ந்து விடுத்து வரும் வேண்டுகோளினை ஏற்று, 28.12.2025 - ஞாயிற்றுக் கிழமை முதல் 31.12.2025 - புதன் கிழமை வரை, தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரையிலும், கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற கழக உடன்பிறப்புகள், அதற்கான படிவங்களைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் தெளிவாக பூர்த்தி செய்து, மேற்கண்ட காலத்திற்குள் தலைமைக் கழகத்தில் அப்படிவங்களை வழங்கலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும் தேதி



## தேர்தல் அதிகாரி அறிவிப்பு

● சென்னை

தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 17 ம் தேதி வெளியிடப்படும் என தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார். வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்ய ஜனவரி 18 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இதேபோன்று வரைவு வாக்காளர் பட்டியலும் டிசம்பர் 19-ம் தேதி வெளியாகி இருந்தது.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் சிறப்பு தீவிர திருத்த பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. எஸ்.ஐ.ஆர் எனப்படும் இந்த பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வீடு வீடாக சென்று படிவங்களை வழங்கி பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சரிபார்க்கும் பணி நடந்தது.

இதையடுத்து வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் தமிழகத்தில் மட்டும் மொத்தம் 94 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. வீடு மாறியவர்கள், முகவரி மாற்றம், திருத்தம் செய்தல், புதிதாக பெயர் சேர்த்தல் பணிகள் நடந்து வருகிறது. வரும் 18 ஆம் தேதி வரை இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இந்நிலையில் தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் எப்போது வெளியாகும் என்ற அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி வரும் பிப்ரவரி 17ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களின்படி வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தம் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக, கணக்கீட்டு கட்டத்தின் போது கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பித்த வாக்காளர்களின் பெயர்களை உள்ளடக்கிய வரைவு வாக்காளர் பட்டியல் 19 டிசம்பர், 2025 அன்று வெளியிடப்பட்டது.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் 19.12.2025 முதல் 18.01.2026 வரை தாக்கல் செய்யப்பட்டு, அதே கால கட்டத்திற்குள் பரிசீலித்து முடிவு செய்யப்படும். அறிவிப்புக் கால கட்டமானது 2025 டிசம்பர் 19 முதல் 2026 பிப்ரவரி 10 வரை ஆகும்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் வழிகாட்டுதல்களின்படி, விவரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டிய வாக்காளர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO) மூலம் அறிவிப்புகள் வழங்கப்படும். இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள 13 ஆவணங்களில் தங்களுக்கு பொருந்தக்கூடிய ஆவணத்தை வாக்காளர்கள் விசாரணையின் போது சமர்ப்பிக்க வேண்டும். ஆவணங்கள் முறையாக சரிபார்க்கப்பட்டபின், தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதை சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்கள் முடிவு செய்வர்.

மேலும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு, வாக்காளர் பதிவு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி இந்நடைமுறை குறித்து விளக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இறுதி வாக்காளர் பட்டியலானது 17.02.2026 அன்று வெளியிடப்படும். என்று கூறப்பட்டுள்ளது.

# "தமிழகம் தலை நிமிர, தமிழனின் பயணம்"

## யாத்திரை

கோபிசெட்டிபாளையம்








கொங்கு மண்ணின் உழைப்பும், பவானி ஆற்றின் வளமும், விவசாயமும் தொழிலும் கை கோர்த்து வளர்ந்த பெருமைமிகு கோபிசெட்டிபாளையத்தில் "தமிழகம் தலை நிமிர, தமிழனின் பயணம்" யாத்திரை உற்சாகமாக நடைபெற்றது.

கைத்தறி, பவர்லூம், விவசாயம், சிறு-நடுத்தர தொழில்கள், பால் உற்பத்தி மூலம் மாநில பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நகரமாக தனித்த அடையாளம் பெற்றது கோபிசெட்டிபாளையம்.

ஆனால் இத்தனை உழைப்பும், பொருளாதார பங்களிப்பும் வழங்கும் இந்த ஊரை, விடியா திமுக அரசு அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல், வெற்று விளம்பரங்களிலும், மக்கள் கவனத்தை திசைதிருப்பும் அரசியலிலும் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறது.

பவானி ஆற்றை நம்பி வாழும் கோபிசெட்டிபாளையத்தில் விவசாயத்திற்கு உயிர்நாடியாக இருக்கும் நீர்ப்பாசன கால்வாய்கள் சீரமைக்கப்படாததால், வயல்கள் தண்ணீர் இல்லாமல் வாடுகின்றன. இதனால் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, விவசாயத்திலிருந்து விலகும் சூழல் உருவாகி வருகிறது.

கோபிசெட்டிபாளையம், ஈரோடு, சத்தி உள்ளிட்ட பகுதிகளை இணைக்கும் முக்கிய சாலைகள் குண்டும் குழியுமாக மாறி, இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் மாணவர்கள் தினசரி உயிர் அபாயத்துடன் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

இதற்கெல்லாம் தக்க பதிலடியை, 2026 சட்டமன்ற தேர்தலில் கோபிசெட்டிபாளையம் மக்கள் வழங்குவார்கள் என்பது உறுதி.

இந்நிகழ்வில் மாநில பொதுச் செயலாளர் A.P. முருகானந்தம், மாநில பொதுச்செயலாளர், கருப்பு முருகானந்தம், ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் S.M.செந்தில் குமார், விவசாய அணி மாநில அமைப்பாளர் G.K.நாகராஜ், கே.எஸ்.ராதாகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் சேலஞ்சர் துரை, அஇஅதிமுகவின் முன்னாள் அமைச்சர் மற்றும் ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் K.C.கருப்பண்ணன் MLA, ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் A.K.செல்வராஜ் MLA, சட்டமன்ற உறுப்பினர் பண்ணாரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரமணிதரன், K.K.காளியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.






# கேப்டன் விஜயகாந்த் நினைவிடத்தில் ஜி.கே.வாசன் மலரஞ்சலி



தேசிய முற்போக்கு திராவிட கழகம் தலைவர் விஜயகாந்த் அவர்களின் 2-ஆம் ஆண்டு நினைவு நாள் 28-ம் தேதி அனுசரிக்கப்படவுள்ள நிலையில் 27- ம் தேதி காலை சென்னை கோயம்பேட்டில் உள்ள கேப்டன் விஜயகாந்த் நினைவிடத்தில் த்ஃமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



# பெருந்தலைவர் காமராஜர், மக்கள் தலைவர் ஜி.கே.மூப்பனார் திருஉருவச் சிலை திறப்பு விழா









அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி, கீழவண்ணம், சிலுப்பனூர், மேலராமநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் மக்கள் தலைவர் ஜி.கே.மூப்பனார் ஆகியோரின் திருஉருவச்



சிலையை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் G.K.வாசன் MP திறந்து வைத்தார். அருகில் மாநில செயற்குழு உறுப்பினர் சுரேஷ் மூப்பனார் மற்றும் ஆயிரக்கான கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# டிச. 31ல் இபிஎஸ் தலைமையில் அதிமுக மா,செ. கூட்டம்

அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் டிச.31ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிமுக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது;

டிச.31ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் பொதுச் செயலாளர் தலைமையில் நடக்க உள்ளது.

அன்றைய தினம், மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெக தலைவர் விஜய்-ன் தேர்தல் வாக்குறுதி! பழைய ஓய்வூதிய திட்டம்?

**● சென்னை**

ஜனநாயகன் படத்தின் ஆடியோ லாஞ்சுக்காக விஜய் மலேசியா சென்றுள்ளார். நேற்று இந்த நிகழ்வோடு விஜய் சினிமாவில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (TVK), 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான தனது தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளது. கட்சி வட்டாரங்களின்படி, TVK தலைவர்கள் ஓய்வுபெற்ற IAS அதிகாரிகளுடன் இணைந்து தொடர் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இது, ஒரு நடைமுறைப்படுத்தக் கூடிய, மக்கள் நலன் சார்ந்த தேர்தல் அறிக்கையை உருவாக்க உதவும் என கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விஜய் தனது முதல் தேர்தல் வாக்குறுதியாக, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை (Old Pension Scheme) மீண்டும் கொண்டுவர வலியுறுத்தி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை முன்னிறுத்தி, வரும் நாட்ஜகளில் பல தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளன. அதற்கு முன்பாக இதை தேர்தல் வாக்குறுதியாக வழங்க தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தொடர்ந்து போராட்டங்கள் மூலமும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் அரசு ஊழியர்கள் பலர் அரசுக்கு எதிராக நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளனர். அதன்படி அரசு ஊழியர்கள் பலர் ஆளும் திமுக அரசுக்கு எதிராக உள்ளனர். பழைய ஓய்வூதியத்தை கொண்டு வர வேண்டும் என்றுகூறி விட்டு.. இப்போது வரை கொண்டு வரவில்லை என்று திமுக மீது கோபத்தில் உள்ளனர்.

இதை மனதில் வைத்து பழைய பென்ஷன் கொண்டு வருவோம் என்று தேர்தல் வாக்குறுதி வழங்க தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஆளும் திமுக இதை மீண்டும் கொண்டு வருவதற்கு முன்பாக அதை வாக்குறுதியாக வழங்க வேண்டும் என்று விஜய் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.



# சினி டாக்



## ஆபாச உடை அணிந்தால் இப்படித்தான் நடக்கும்...


'தி ராஜா சாப்' இப்படத்தில், சஞ்சய்தத், நிதி அகர்வால், ரித்தி குமார் மற்றும் மாளவிகா மோகனன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தின் 'சஹானா சஹானா' பாடல் வெளியீட்டு விழா கடந்த வாரம் ஹைதராபாத்தில் தனியார் மாலில் நடைபெற்றது. இந்த விழாவில் நடிகை நிதி அகர்வால் கலந்து கொண்டார். அப்போது, நிதி அகர்வாலை சூழ்ந்து கொண்ட ரசிகர்கள் அவரை தவறான இடத்தில் தொட்டு எல்லைமீறி நடந்து கொண்டனர். இந்த வீடியோ இணையத்தில் வெளியாகி பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.

இதுகுறித்து, தண்டோரா திரைப்படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் பேசிய தெலுங்கு நடிகர் சிவாஜி, பெண் எப்போதும் அழகானவர்கள். புடவை அணிந்து வரும் பெண்களின் அழகே தனி ரகம். ஆபாசமாக உடல் பாகங்கள் தெரியும் படி உடைகள் அணிவது பெண்களுக்கு நல்லது இல்லை. ஹீரோயின்கள் பொது நிகழ்ச்சிக்கு வரும்போது சற்று கவனமாக உடை அணிந்து வர வேண்டும், அப்படி வரவில்லை என்றால், நடக்கக்கூடாதது நடந்துவிடும், பிரச்சனை உங்களுக்குத்தான் என மேடையில் பேசி இருந்தார். அவரின் இந்த பேச்சு சர்ச்சைக்குள்ளான நிலையில், தெலுங்கு நடிகை அனசுயா கடுமையாக கண்டித்து இருந்தார்.

அதே போல, பாடகி சின்மயி, பெண்களின் ஆடை பற்றி பேசும் அந்த நடிகர். "அவரே ஜீன்ஸ் மற்றும் ஹூடி அணிகிறார். அவர் வேட்டி மட்டுமே அணிந்து இந்திய கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும். அவருக்கு திருமணமாகி இருந்தால், திருமணமானவர் என்பதைக் குறிக்க கங்கணம் மற்றும் மெட்டி அணிய வேண்டும் என தனது ஆதங்கத்தை பதிவிட்டு இருந்தார். தெலுங்கு நடிகர் சிவாஜியின் மோசமான பேச்சுக்கு பதிலடி கொடுத்துள்ள நடிகை நிதி அகர்வால், "Blaming a Victim is called Manipulation" என தனது கோவத்தை வெளிப்படுத்தி உள்ளார்.



## கண்ணுக்கு விருந்தளிக்கும் ரச்சிதா மகாலட்சுமியின் குளுகுளு போட்டோஸ்



சரவணன் மீனாட்சி' சீரியல் மூலம் தமிழ் தொலைக்காட்சி ரசிகர்களிடையே பிரபலமான ரச்சிதா மகாலட்சுமி. சின்னத்திரை மட்டுமின்றி, வெள்ளித்திரையிலும் தனது நடிப்பால் கவனம் ஈர்த்துள்ளது மட்டுமல்லாமல், தற்போது சமூக வலைதளங்களிலும் அதிக ஆக்டிவாக இருந்து வருகிறார். அந்த வகையில், அவர் சமீபத்தில் மலேஷியா பயணத்தின் போது எடுத்துக் கொண்ட அழகான புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து ரசிகர்களை கவர்ந்துள்ளார்.

மலேஷியாவின் புகழ்பெற்ற அடையாளமாக விளங்கும் இரட்டை கோபுரங்கள் முன் நின்று, விதவிதமான கோணங்களில் ஸ்டைலாக போஸ் கொடுத்து எடுத்த புகைப்படங்களை நடிகை ரச்சிதா பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் வெளியாகிய சில மணி நேரங்களிலேயே, லைக்குகள் குவிந்து வருகின்றன. போட்டோவை பார்த்த ரசிகர்கள் "அழகின் மறுபெயர்", "ஸ்டைலிஷ் குயின்", "வெளிநாட்டு லுக் சூப்பர்" போன்ற கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

நடிப்பு திறமையாலும், எளிமையான தோற்றத்தாலும் இல்லத்தரசிகள் மத்தியில் தனி இடம் பிடித்த ரச்சிதா, இதுவரை பல பல வெற்றி தொடர்களில் நடித்துள்ளார். இதில் இவர் நடித்த 'சரவணன் மீனாட்சி' தொடர் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இதைத் தொடர்ந்து 'பிரிவோம் சந்திப்போம்', 'நாச்சியார்புரம்', 'இடையாற்று மங்கை' போன்ற தொடர்களிலும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். சின்னத்திரை வெற்றிக்கு பிறகு ரச்சிதா வெள்ளித்திரையிலும் தனது பயணத்தை தொடங்கினார். 2015ஆம் ஆண்டு வெளியான 'உப்புக் கருவாடு' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். தொடர்ந்து தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட மொழி திரைப்படங்களில் நடித்துள்ளார். 'பயர்', 'எக்ஸ்ட்ரீம்' உள்ளிட்ட படங்களில் நடித்ததன் மூலம் சினிமா ரசிகர்களிடமும் கவனம் பெற்றார். தற்போது நடிகை ரச்சிதா மகாலட்சுமியை இன்ஸ்டாகிராமில் 1.7 மில்லியன் ரசிகர்கள் பின்தொடர்ந்து வருகின்றனர். தனது வாழ்க்கை தருணங்கள், பயண அனுபவங்கள், போட்டோஷூட் படங்கள் என அனைத்தையும் ரசிகர்களுடன் தொடர்ந்து பகிர்ந்து கொள்வதால், சமூக வலைதளங்களில் அவர் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறார்.

தற்போது இவர் பகிர்ந்து இருக்கும் மலேஷியா புகைப்படங்கள் 67 ஆயிரத்திற்கும் அதிகமான லைக்குகளை பெற்று வருகிறது.

## அஜித்-ஷாலினியின் லேட்டஸ்ட் போட்டோ...

### கிறிஸ்துமஸ் தினத்தில் வெளியிட்ட பிரபலம்



நடிகர் அஜித் என்பதை தாண்டி ரேஸர் அஜித் என்று தான் இப்போது கூற வேண்டும். காரணம் கடந்த பல மாதங்களாக ரேஸிங்கில் களமிறங்கி பல வெற்றிகளை குவித்து வருகிறார்.

நீண்ட இடைவேளைக்கு பிறகு ரேஸில் அஜித் கலந்துகொண்டு சாதிப்பதை பார்க்கும் போது ரசிகர்கள் மகிழ்ச்சியின் உச்சத்தில் உள்ளனர் என்றே கூறலாம். இப்போது அஜித் மலேசியாவில் நடக்கும் ரேஸிங்கில் பங்குபெற்று வருகிறார்.

மலேசியா செல்லும் பிரபலங்கள் அஜித்தை நேரில் சந்தித்து புகைப்படங்கள் எடுத்த அவரது போட்டியை பார்த்தும் வருகிறார்கள்.

போட்டிகளை முடித்த கையோடு அஜித் மீண்டும் படங்களில் தொடர்ந்து நடிக்க உள்ளார். கடைசியாக அவரது நடிப்பில் குட் பேட் அக்லி படம் வெளியானது, படம் சூப்பர் டூப்பர் ஹிட், இதனால் அடுத்தும் அஜித், ஆதிக் ரவிச்சந்திரனுடனேயே கூட்டணி அமைக்கிறார், படத்திற்கான ப்ரீ புரொடக்ஷன் வேலைகளும் நடந்து வருகிறது. கார் ரேஸ் போட்டியில் பிஸியாக இருக்கும் அஜித்தின் ஒரு புகைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளது. சுரேஷ் சந்திரா, கிறிஸ்துமஸ் வாழ்த்து கூற அஜித்-ஷாலினியுடன் எடுத்த புகைப்படத்தை பகிர அது இப்போது வைரலாகி வருகிறது.

## விஜய் சாரோட எனக்கு 'One Last Chance'

**ஜனநாயகன் படம் குறித்து அனிருத்**



விஜய் கடைசி திரைப்படமாக அறிவித்திருக்கும் 'ஜனநாயகன்' வருகிற ஜனவரி 9-ம் தேதி வெளியாக இருக்கிறது. அ.வினோத் இயக்கத்தில், விஜய் நடிப்பில் உருவாகி இருக்கும் இப்படத்தில் பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பிரியாமணி, பாபி தியோல், பிரகாஷ் ராஜ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருக்கிறார். விஜய்யின் கடைசி திரைப்படம் என்பதால், இப்படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது பேசிய அனிருத்," இது விஜய் சாரோட எனக்கு 'One Last Chance'. எங்க காம்பினேஷன்ல வந்த எல்லாப் பாட்டும் ஹிட் தான்" என்று நெகிழ்ச்சியாகப் பேசியிருக் கிறார்.